# பத்மனாபபுரம் நகராட்சி

பத்மனாபபுரம் நகர் மன்றத்தின் சாதாரண கூட்டம் 2021–ம் வருடம் அக்டோபர் மாதம் 29–ம் தேதி காலை 11.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் வைத்து நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம் மற்றும் அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மான விவரங்கள் பின்வருமாறு.

## பொருட்கள்

1)கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் வாராந்திர ஆய்வுக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவரால், பத்மனாபபுரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள குடியிருப்பு மற்றும் வணிக நிறுவனங்களிலிருந்து உற்பத்தியாகும் கழிவுநீரை அவரவர் குடியிருப்பு/வணிக வளாகத்தின் ஒரு பகுதியில் உறிஞ்சுகுழி ( ) அமைத்து அதில் மேற்படி கழிவு நீரை விட்டு நீர் நிலைகள் மாசுபடாமல் நடவடிக்கை மேற்கொள்ளவும், மழைநீர் வடிகால்களில் மழைநீர் மட்டும் செல்லும் வண்ணம் செயல்படுத்துமாறு திட்டமிட்டு பணிகளை செயல்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. பொது சுகாதார நலன் காக்கும் பொருட்டு / பொது சுகாதார சட்ட விதிகளை முழுமையாக கடைபிடித்து உள்ளாட்சி நிர்வாகத்திற்கும், மாவட்ட நிர்வாகத்திற்கும் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டியது இன்றியமையாதது என்பதை கருத்திற் கொண்டு கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவரின் மேற்படி அறிவுரைப்படி, பத்மனாபபுரம் நகராட்சிக்குட்பட்ட அனைத்து வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களில் உருவாகும் கழிவு நீரை அவரவர் குடியிருப்பு/வணிக வளாகத்தின் ஒரு பகுதியிலேயே உரிய

முறைப்படி உறிஞ்சு குழி அமைத்து அதில் கழிவு நீரை விடுவதற்காக ஆலோசனைகள் மற்றும் தொடர் நடவடிக்கைகளை பத்மனாபபுரம் நகராட்சி மூலம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு- நீர் நிலைகள் மாசுபடா வண்ணம் காக்கும் - பொது சுகாதார பணியின் அத்தியாவசியம் மற்றும் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் கூட்ட நடவடிக்கைகள் ஆகிய முக்கியத்துவம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 817/2021/அ2)

**<u>மன்றத் தீர்மானம் எண். 1827</u>**

அனுமதிக்கப்படுகிறது.

2)பத்மனாபபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண். TN75AMAM 2378 (ம)TN75B4577 வாகனத்திற்கு வாகன விபத்து காப்பீடு பிரிமியம் செலுத்துவதற்கு ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.37864/- னை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஆணையரின் முன் அனுமதி பெற்று வழங்கியமைக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- பொது சுகாதார பிரிவு அவசர அவசியம் கருதி ஆணையர்/தனி அலுவலர் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(அ2/631/2018)

**<u>மன்றத் தீர்மானம் எண். 1828</u>**

அனுமதிக்கப்படுகிறது.

3)தமிழக அரசு உத்தரவு மற்றும் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் வாராந்திர ஆய்வுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டதன்படி இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கோவிட்-19 தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் மற்றும் கன்னியாகுமரி மாவட்ட பேரிடர் மேலாண்மைத் தலைவர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறைகள் ந.க.எண். ஹெச்/992/2021 நாள் 07/10/2021-ல் நகராட்சி ஆணையர்கள் (வரிசை எண்.6) என்ற பத்தியில் குறிப்பிட்டுள்ளபடி, மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம் நடத்தியதற்கும், எதிர்காலத்தில் நடத்தப்படவுள்ளதற்கும் உரிய செலவின தொகையினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- தமிழக அரசு உத்திரவு மற்றும் பேரிடர் மேலாண்மைத் தலைவர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறைகளின் அவசர அவசியம் கருதி, மெகா கொரோனா தடுப்பூசி முகாம்களுக்குரிய செலவுத் தொகையினை வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

<u>மன்றத் தீர்மானம் எண். 1829</u>

அனுமதிக்கப்படுகிறது.

4)இந்நகராட்சியில் ஈப்பு வாகனம் TN74W0436 பழுது பார்க்கும் பணி மேற்கொள்ள கீழ்கண்ட விலைப்புள்ளிகள் பெறப்பட்டன.

| | | |
|---|---|---|
| 1) | அக்ஷா மோட்டார்ஸ் | 12300 |
| 2) | கணேஷ் மோட்டார்ஸ் | 14420 |
| 3) | மாதவ மோட்டார்ஸ் | 13670 |

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் அக்ஷா மோட்டார்ஸ் விலைப்புள்ளி குறைவாக இருப்பதால் அக்ஷா மோட்டார்ஸ் நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கவும் , அதற்குரிய செலவுத் தொகைக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>மன்றத் தீர்மானம் எண். 1830</u>

அனுமதிக்கப்படுகிறது.

5)இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கும் வாகனம் எண். TN75AMM 2378 TATA ACE வாகனத்துக்கு தகுதி சான்று புதுப்பித்துக் கொள்ள கடைசி தேதி 10/11/2021 எனவும் அதற்கான வாகனப் பழுதுகளை மேற்கொள்ள வேண்டிய விபரம் மற்றும் உத்தேச செலவுத் தொகை ரூ.40887/- என சம்பந்தப்பட்ட ஓட்டுநரால் மதிப்பீட்டுப் பட்டியல் () வழங்கப்பட்டுள்ளதின்படி ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.41000/-னை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் பொது சுகாதார பிரிவு அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:-பொது சுகாதார அவசர அவசியம் கருதி மராமத்துப்பணி மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவீனத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 725/2020/அ2)

**மன்றத் தீர்மானம் எண். 1831**

அனுமதிக்கப்படுகிறது.

6)இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சேகரமாகும் திடக்கழிவுகள் மருந்துக் கோட்டை உரக்கிடங்கில் கொட்டப்பட்டு அரவை இயந்திரம் மூலம் உரமாக்கப்பட்டு வருகிறது. ஆனால் தற்போது அரவை இயந்திரம் பழுதாகி உள்ளதாலும் பழைய கழிவுகள் (Legacy Waste) தேக்கமடைந்தும், தற்போது சேகரிக்கப்படும் கழிவுகள் கொண்டு செல்ல இயலாத நிலை உள்ளது. எனவே தேங்கி கிடக்கும் கழிவுகளை ( ) மூலம் ஒதுக்குவதற்கு ஒரு மணி நேரத்திற்கு ரூ. 2100/- ( ) வீதம் 50 மணி நேரத்திற்கு உத்தேச செலவினம் ரூ.1,05,000/- (ஒரு இலட்சத்து ஐந்தாயிரம் மட்டும்) இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும், அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு தனி அலுவலர்/ ஆணையர் முன் அனுமதி பெற்று நடவடிக்கை தொடர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- உத்தேச செலவீனத்திற்கும் தொகையினை வருவாய் நிதியிலிருந்து வழங்கவும், பொது சுகாதார அவசர அவசியம் கருதி

தனி அலுவலர்/ஆணையர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். அ2/0467/2018)

**<u>மன்றத் தீர்மானம் எண். 1832</u>**

அனுமதிக்கப்படுகிறது.

7)நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை, அவர்களின் கடிதம் ந.க.எண்.15959/2021/WS-1 நாள் 12/08/2021-ன் படி நகராட்சி பகுதியிலுள்ள குளங்களை (நீர்நிலைகள்) ஆய்வு செய்து உரிய அறிக்கை அனுப்ப அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதன்படி இந்நகராட்சி பகுதியிலுள்ள 22 நீர் நிலைகளை கீழ்க்கண்டவாறு ஆய்வு செய்ய வேண்டியுள்ளது.

Biological Oxygen Demand (BOD) in mg/L
Chemical Oxygen Demand (COD)in mg/L
Dismoked oxygen(DO) in mg/L
Total Dissolued Solids (TDS) in mg/L
Torbiding in NTV

மேற்கண்ட விபரப்படி ஆய்வு செய்வதற்கு ஒரு மாதிரிக்கு ரூ.3304/- ஆகும். மேற்படி 22 நீர் நிலைகளை ஆய்வு செய்வதற்கு ரூ.72688/- ஆகும். மேற்கண்ட தொகைக்கு Exceutive Engineer, RWS Division, Thoothukudy என்ற முகவரிக்கு வங்கி வரைவோலையாக எடுத்து அனுப்பவும், செலவினத்தினை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அவசர அவசியம் கருதி தொகை வழங்கியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

அ.கு:- மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1101/2021/இ1)

**<u>மன்றத் தீர்மானம் எண். 1833</u>**

அனுமதிக்கப்படுகிறது.

8)பத்மனாபபுரம் நகராட்சியில் 15th CFC 2020-2021-ன் கீழ் கீழ்கண்ட விபரப்படி பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | Construction of Vehicle Shed at Municipal Office in Padmanabhapuram Municipality. | 9.00 |

மேற்கண்ட பணிக்கு 05/10/2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ.எண். | ஒப்பந்ததாரர் /நிறுவனதாரர் பெயர் |
|---|---|
| 1. | திரு.ஜி.சுந்தர்ராஜ், பள்ளியாடி |
| 2. | திரு.சி. ஜெகஸ்லால், பரைக்கோடு, தக்கலை |

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்ததில் கீழ்க்கண்டவாறு விலை விகிதங்கள் வழங்கியுள்ளார்கள்.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர்/நிறுவனதாரர் பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை ரூ. | விலை விகிதம் கூடுதல்/ குறைவு |
|---|---|---|---|---|
| 1. | திரு. ஜி.சுந்தர்ராஜ் பள்ளியாடி | 9.00 | 805906.78 | 1.52% (சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம்) |
| 2, | திரு.சி. ஜெகஸ்லால் பரைக்கோடு தக்கலை | 9.00 | 793604.64 | -0.03% (சதவீதம் மதிப்பீட்டை விட |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | குறைவு) |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான -0.03% சதவீதம் வழங்கியுள்ள வ.எண்.2ல் காணும் ஒப்பந்ததாரர் திரு. சி. ஜெகஸ்லால் பரைக்கோடு தக்கலை அவர்களது ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.011/2021/இ1)

**மன்றத் தீர்மானம் எண். 1834**

அனுமதிக்கப்படுகிறது.

ஒப்பம்/-

தனி அலுவலர் (ம) ஆணையாளர்,
பத்மனாபபுரம் நகராட்சி.